

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 05-07-2023


# “பா.ஜ.க. வாஷிங் மெஷின்”

**“பா.ஜ.க.வின் வாஷிங் மெஷின் மீண்டும் தனது பணியைத் தொடங்கி விட்டது. மகாராஷ்டிராவில் இப்போது பா.ஜ.க. கூட்டணியில் இணைந்தவர்களை, அமலாக்கத்துறையும் வருமான வரித்துறையும் சி.பி.ஐ.யும் துரத்தி வருகிறது. இவர்கள் இப்போது பா.ஜ.க. கூட்டணியில் இணைந்ததால் அனைவரும் சுத்தமாக்கப்பட்டுள்ளார்கள்”**

- என்று ஒன்றிய முன்னாள் அமைச்சரும், காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவருமான ஜெயராம் ரமேஷ் சொல்லி இருக்கிறார். ஆமாம்! பா.ஜ.க.வின் வாஷிங் மெஷினில் போட்டதும் அஜித்பவார் சுத்தமாகி விட்டார்.

கடந்த 2021, அக்டோபர் 7ஆம் தேதி, மகாராஷ்டிரா மாநிலத்தின் துணை முதல்வராக இருந்த தேசியவாத காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அஜித் பவார் வீட்டில் வருமான வரித்துறை சோதனை நடத்தியது. அவரது மூன்று சகோதரிகளின் வீட்டிலும் சோதனை நடத்தப்பட்டது. மும்பை, புனே, கோவா, ஜெய்ப்பூர் உள்ளிட்ட நகரங்களில் உள்ள அஜித் பவாருக்கு சொந்தமான, நெருக்கமானவர்களின் வீடுகள், அலுவலகங்கள் என 70 இடங்களில் வருமான வரித்துறை சோதனை நடத்தியது. சோதனையின் முடிவில், 180 கோடி ரூபாய் அளவுக்கு வருமான வரிக்கணக்கில் காட்டப்படாத கருப்புப் பணம் கண்டறியப்பட்டதாகவும், 2.13 கோடி ரூபாய் மதிப்புள்ள நகைகள், 4.32 கோடி ரூபாய் ரொக்கப்பணம் கைப்பற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. மேலும், அஜித் பவாருக்கு, அவர் பெயரிலும் அவரது பினாமிகள் பெயரிலுமாக மொத்தம் 1,000 கோடி ரூபாய் அளவுக்கு சொத்து மதிப்பு உள்ளதாக வருமான வரித்துறை செய்தியை கசியவிட்டது. ‘என்னை மிரட்ட முடியாது’ என்றார் அஜித் பவார். இப்போது அஜித் பவார் பயந்துவிட்டார். அவர் மீது ரெய்டு நடத்திய பா.ஜ.க.கட்சி, அஜித் பவாருக்கு துணை முதலமைச்சர் பதவியை வழங்கி மகிழ்ந்துள்ளது.

ஊழல்வாதியான அஜித் பவார், இப்போது சுத்தமானவராக ஆக்கப்பட்டு விட்டார் பா.ஜ.க. வாஷிங் மெஷினால்!

**அஜித் பவாருக்குச் சொந்தமான ரூ.65 கோடி மதிப்பிலான சொத்துக்களை முடக்கியது அமலாக்கத்துறை. இப்போது அவர் பா.ஜ.க. கூட்டணி ஆட்சியில் துணை முதலமைச்சராக இருக்கிறார். அவரது வீட்டுக்கு மேல் விசாரணை நடத்த அமலாக்கத்துறை போகுமா? 18 மணி நேரம் வேண்டாம்... 1 மணி நேரமாவது விசாரணை நடத்துமா அமலாக்கத்துறை?!**

அணி மாறி பா.ஜ.க.ஆட்சிக்கு ஆதரவு தெரிவித்துள்ள 9 பேரில் அஜித் பவார் உள்பட 5 பேர் மீது அமலாக்கத்துறை வழக்கு உள்ளது. அஜித் பவார் மீது நீர்பாசன திட்ட வழக்கு உள்ளது. ஹசன் முஷ்ரிப் மீது சர்க்கரை ஆலை வழக்கு உள்ளது. சகன் புஜ்பால் மீது கட்டுமான வழக்கு உள்ளது. ஏற்கனவே கைது செய்யப்பட்டு சிறையில் இருந்தவர் இவர். அதிதி தட்கரேயின் தந்தை மீது நீர்பாசன வழக்கு இருக்கிறது. அணி மாறி இருக்கும் பிரபுல் படேல் மீது சி.பி.ஐ. குற்றப்பத்திரிகை உள்ளது. இவர்கள் அனைவரும் பா.ஜ.க.வின் வாஷிங் மெஷினால் வெளுக்கப்பட்டு விட்டார்கள்.

2019 ஆம் ஆண்டு மகாராஷ்டிராவில் தேர்தல் நடந்தது. கூட்டணி அமைத்து போட்டியிட்ட பா.ஜ.க.வும் சிவசேனாவும் ஒருமித்த முடிவுகளை எடுக்கவில்லை. அதனால் ஆட்சி அமைக்கவில்லை. இந்த நிலையில் பா.ஜ.க.வும் தேசியவாத காங்கிரஸ் கட்சியும் கூட்டணி ஆட்சியை அமைத்தது. பா.ஜ.க.வின் தேவேந்திர பட்னவிஸ் முதலமைச்சராக ஆனார். தேசியவாத காங்கிரசை சேர்ந்த அஜித் பவார் துணை முதலமைச்சர் ஆனார். இந்த ஆட்சி மூன்றே நாளில் முடிவுக்கு வந்தது. அஜித் பவார் மீதான அனைத்து வழக்குகளையும் பா.ஜ.க. அரசு திரும்பப் பெற்றது.

சிவசேனா, தேசியவாத காங்கிரஸ், காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் கூட்டணி அமைந்தது. அப்போது சிவசேனாவின் உத்தவ் தாக்கரே முதலமைச்சர் ஆனார். தேசியவாத காங்கிரஸை சேர்ந்த அஜித் பவார் துணை முதலமைச்சர் ஆனார். இதனை பா.ஜ.க.வால் பொறுக்க முடியவில்லை. சிவசேனா வில் இருந்து ஏக்நாத் ஷிண்டே என்பவரை இழுத்து அந்தக் கட்சியை உடைத்தது. அவர் சிவசேனா எம்.எல்.ஏ.க்களை கடத்தி வந்தார். அந்த மாநிலத்தை விட்டே வேறு மாநிலத்தில் அடைத்து வைத்திருந்தார்கள். இதனால் பெரும்பான்மை ஆதரவை உத்தவ் தாக்கரே இழந்தார். அதனால் தனது பதவியை விட்டு அவர் விலகினார்.

சிவசேனாவில் இருந்து பிரிந்து வந்த ஏக்நாத் ஷிண்டேவுடன் கைகோர்த்து பா.ஜ.க. ஆட்சி அமைத்தது. ஏக்நாத் ஷிண்டேவுக்கு முதலமைச்சர் பதவியைக் கொடுத்தார்கள். பா.ஜ.க. ஆட்சியில் முதலமைச்சராக இருந்த தேவேந்திர பட்னவிஸ், துணை முதலமைச்சராக இருக்க ஒப்புக் கொண்டார்.ஏதாவது கிடைத்தால் போதும் என்று நினைத்தார் பட்னவிஸ்.

இந்த நிலையில்தான் ரெய்டுக்கு மேல் ரெய்டு நடத்தி தேசியவாத கட்சியில் இருந்து அஜித் பவார் இழுக்கப்பட்டார். இப்போது ஏக்நாத் ஷிண்டே முதலமைச்சர். பட்னவிஸோடு சேர்ந்து அஜித் பவாரும் துணை முதலமைச்சர். ஏதாவது கிடைத்தால் போதும், ரெய்டில் இருந்து தப்பினால் போதும் என்று நினைக்கிறார் அஜித் பவார்.

**இவ்வளவும் 2019 அக்டோபர் முதல் 2023 ஜூலை வரை நான்காண்டு காலத்தில் நடந்தவை ஆகும். படிக்கும் போதே நாற்றம் அடிக்கிறதா? இதுதான் பா.ஜ.க. பாணி அரசியல் ஆகும்.**

சிவசேனாவில் இருந்து உடைக்கப்பட்ட ஏக்நாத் ஷிண்டே முதலமைச்சர். தேசியவாத காங்கிரசில் இருந்து மிரட்டி அழைத்து வரப்பட்ட அஜித் பவார், துணை முதலமைச்சர். இந்த லட்சணத்தில் மகாராஷ்டிராவில் பா.ஜ.க. ஆள்கிறதாம்! இத்தகைய கீழ்த்தரமான சம்பவங்களின் மூலமாகத்தான் ஆள்கிறது பா.ஜ.க.; ஆள நினைக்கிறது பா.ஜ.க.!

**‘மூன்று எஞ்சின் அரசு இது’ என்று தங்கள் மூன்று பேரையும் வர்ணித்துள்ளார் ஏக்நாத் ஷிண்டே. இது வளர்ச்சிப் பாதையில் முன்னேறுமாம். ஒன்று பஸ் எஞ்சின். இன்னொன்று பைக் எஞ்சின். மற்றொன்று ஆட்டோ எஞ்சின். மூன்றையும் ஒரே வண்டியில் பொருத்தினால் என்ன ஆகும்? அதுதான் அடுத்தடுத்து நாம் பார்க்க இருக்கும் அரசியல் ஆகும். ஏக்நாத் ஆதரவு எம்.எல்.ஏ.க்களையும், அஜித் ஆதரவு எம்.எல்.ஏ.க்களையும் பா.ஜ.க.வில் இணைத்துவிட்டு இவர்கள் இருவரையும் தூக்கி வெளியில் வீசப் போகிறார்கள். அதையும் பார்க்கத்தானே போகிறோம்!**

## குற்றாலத்திற்கு நீர்வரத்து அதிகரிப்பு!

தென்காசி, ஜூலை 5 -

நீர்வரத்து அதிகரிப்பு காரணமாக குற்றாலத்தில் அனைத்து அருவியிலும் மக்கள் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. தென்காசி, தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் ஆண்டுதோறும் ஜூன், ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் சாரல் மழை பொழிந்து குளுமையான சீசன் நிலவும். இந்த ரம்மியமான சூழலில் குற்றாலம் அருவிகளில் ஆர்ப்பரித்து விழும் தண்ணீரில் குளித்து மகிழ்வதற்காக தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும், வெளிமாநிலங்களில் இருந்தும் பல ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் வருவார்கள்.

நீர்வரத்து அதிகரிப்பு காரணமாக குற்றாலத்தில் அனைத்து அருவியிலும் மக்கள் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. ஐந்தருவி, பழைய குற்றாலம், பிரதான அருவி உள்ளிட்ட அனைத்து அருவியிலும் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.



திண்டுக்கல்லுக்கு ஆய்வுக்கு வந்த பொதுப்பணிகள் மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் எ.வ.வேலு தோமையார்புரத்தில் ஊரகவளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி முன்னிலையில் மரக்கன்றுகள் நட்டார். உடன் உணவு பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, திண்டுக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் ஐ.பி.செந்தில்குமார், மாவட்ட ஆட்சியர் பூங்கொடி ஆகியோர் தோமையார்புரத்தில் மரக்கன்றுகளை நட்டனர்.

### கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

# திருவெண்காடு டாக்டர் ஜெய.இராஜமூர்த்தி புதல்வர் மணவிழா!

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வரவேற்புரை! சென்னை - அண்ணா அறிவாலயம் - கலைஞர் அரங்கில் நடைபெறுகிறது!

சென்னை, ஜூலை 5 -

மயிலாடுதுறை மாவட்டம், திருவெண்காடு, நினைவில் வாழும் சா.ஜெயராமன் - திருமதி தனஜோதி ஆகியோரின் பெயரனும் டாக்டர் ஜெய.இராஜமூர்த்தி - திருமதி ஹேமலதா இராஜமூர்த்தி ஆகியோரின் புதல்வருமான இரா.சாரங்கராஜன் என்கிற சஞ்சய்க்கும், சென்னை - நினைவில் வாழும் க.பழனி - திருமதி ப.கௌரி அம்மாள், சேலம் - நினைவில் வாழும் ச.அ.வேடியப்பன் - திருமதி வே.கல்யாணி அம்மாள் ஆகியோரின் பெயர்த்தியும், க.ப.சரவணன் - திருமதி ச.உமாராணி ஆகியோரின் புதல்வியுமான ச.கீர்த்தனாவுக்கும் மணவிழா நாளை (6.7.2023 வியாழக்கிழமை) காலை 9.30 மணியளவில் சென்னை, தேனாம்பேட்டையில் அமைந்துள்ள அண்ணா அறிவாலயம் - கலைஞர் அரங்கில் நடைபெறுகிறது.

இம்மணவிழாவை கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்துகிறார்.

கழக இளைஞர் அணிச் செயலாளர் - இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வரவேற்புரையாற்றுகிறார்.

இம்மணவிழாவில் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், கழக முன்னணியினர் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.

டாக்டர் இரா.தனஞ்ஜெயன் நன்றி கூறுகிறார்.

இம்மணவிழா வரவேற்பு 10.7.2023 - திங்கள்கிழமை மாலை 6 மணியளவில் தாண்டவன் குளம் சங்கமித்திரை திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இம்மணவிழா வரவேற்பில் கழக முன்னணியினர் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.

### திண்டுக்கல் மாவட்டத்தில் - விவசாய பயன்பாட்டிற்காக கால்வாய் வழியாக

# நீரை கொண்டு சென்று கண்மாய்களில் நிரப்பும் திட்டம்!

### அமைச்சர் இ.பெரியசாமி பேச்சு!

திண்டுக்கல், ஜூலை 5-

ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி ரெட்டியார்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில் 2 புதிய அங்கன்வாடி கட்டிடம், 1 பல்நோக்கு மைய கட்டிடம், 2 நியாயவிலைக் கடையை திறந்து வைத்தார்.

ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட புதுச்சத்திரம், மாங்கரை மற்றும் அம்மாபட்டி ஆகிய கிராமங்களில் இரண்டு புதிய அங்கன்வாடி கட்டிடங்கள், 1 பல்நோக்கு மைய கட்டிடம், இரண்டு நியாய விலைக் கடைகளை திறந்து வைத்தார்.

மேலும் புதுச்சத்திரம் ஊராட்சி கம்பிளிநாயக்கன்பட்டியில் ரூ.11.0 இலட்சம் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி கட்டிடம், புதுச்சத்திரத்தில் ரூ.10.93 இலட்சம் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி கட்டிடம், அரண்மனையூரில் ரூ.7.0 இலட்சம் மதிப்பீட்டில் பல்நோக்கு மைய கட்டிடம், மாங்கரை ஊராட்சி கொட்டாரப்பட்டியில் ரூ.7.0 இலட்சம் மதிப்பீட்டில் புதிய நியாய விலைக்கடை மற்றும் அம்மாபட்டி ஊராட்சி அம்மாபட்டியில் ரூ.10.0 இலட்சம் மதிப்பீட்டில் புதிய நியாய விலைக்கடைகள் என மொத்தம் ரூ.45.93 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட கட்டிடத்தினை திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளில்ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் கலந்து கொண்டு பேசியதாவது: -

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழக குழந்தைகள் சுகாதாரத்துடனும், முழு பாதுகாப்புடனும் கல்வி பயில வேண்டும் என்பதற்காக உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட உத்தரவிட்டுள்ளார். அதனடிப்படையில் பல்வேறு இடங்களில் புதிய அங்கன்வாடி மையங்கள் கட்டப்பட்டு வருகின்றன.



பொதுமக்களின் சமூக பாதுகாப்பினை உறுதி செய்யும் பொருட்டு, குடும்ப அட்டைதாரர்கள் தாங்கள் வசிக்கும் பகுதிகளிலேயே குடிமை பொருட்களை நியாயவிலைக்கடைகளில் பெற்றுக்கொள்வதற்காக நியாயவிலைக் கடைகள் மற்றும் பகுதிநேர நியாயவிலைக்கடைகள் திறக்கப்பட்டு வருகிறது.

புதுச்சத்திரம் பொதுமக்களின் தேவைகளை நிறைவேற்றிடும் வகையில் அதிகப்படியான பொதுமக்கள் கலந்து கொள்ளும் பொருட்டு, நடுத்தர குடும்பங்கள் குறைந்த செலவில் தங்களது வீட்டு விழாக்களை நடத்துவதற்கு ஏதுவாக ஒரு பெரிய சமுதாயக் கூடம் கட்டித்தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தமிழக முதலமைச்சர் அவர்களிடம் விவசாயிகளின் பயன்பாட்டிற்காக தனியாக பெரும் திட்டம் உருவாக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டதன் அடிப்படையில், திட்ட வரைவு தயாரிக்கப்பட்டு, கால்வாய் வழியாக நீரை கொண்டு சென்று, கண்மாய்களில் நிரப்பி அதன் வாயிலாக விவசாய பயன்பாட்டிற்கும், நிலத்தடி நீர்மட்டம் மேம்படுத்துவதற்கும், குடிநீர் ஆதாரத்திற்காகவும், திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. ரெட்டியார்சத்திரம் ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் மட்டும் தனியாக குடிநீர் பணிகளை மேற்கொள்வதற்கு ரூ.214 கோடியை தமிழக முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கீடு செய்துள்ளார்கள். திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள அனைத்து குளங்களை சீரமைத்து, காவேரி ஆற்றிலிருந்து கடலுக்கு செல்லும் எஞ்சிய தண்ணீரை குளங்களில் சேமித்து விவசாய பணிகளுக்கு பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. நீண்ட கால திட்டமாக இதனை செயல்படுத்துவதற்கு திட்ட மதிப்பீடு தயார்செய்திட ரூ.1 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தேர்தல் காலங்களில் அறிவித்த வாக்குறுதியினை செயல்படுத்தும் விதமாக செப்டம்பர் மாதம் முதல் குடும்ப தலைவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1000 வழங்கும் திட்டம் செயல்படுத்துவதற்கு பணிகள் நடைபெற்று வருகிறது என்று ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் பேசினார்.

இந்நிகழ்ச்சிகளில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திலகவதி, ரெட்டியார்சத்திரம் ஊராட்சி ஒன்றிய தலைவர்.ப.க.சிவகுருசாமி, முன்னாள் பெருந்தலைவர் .சத்தியமூர்த்தி, மாவட்ட வழங்கல் அலுவலர் சிவக்குமார், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் சி.பூங்கொடி, ஊராட்சி மன்றத்தலைவர்கள் பரமேஸ்வரி, வீ.லட்சுமி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### முதலாமாண்டு வகுப்புகள் தொடக்கம்!

# கல்லூரிகளுக்கு ஆர்வமுடன் மாணவர்கள் வருகை!

### பேராசிரியர்கள் மலர்கொத்து வழங்கி வரவேற்றனர்!

சென்னை, ஜூலை 5 -

கலைஅறிவியல் கல்லூரிகளில் முதலாம் ஆண்டு வகுப்புகள் தொடங்கப்பட்டிருக்கும் நிலையில், நேற்று மாணவ-மாணவிகள் ஆர்வமுடன் கல்லூரிகளுக்கு வந்தனர்.

புதிய மாணவ - மாணவிகளை, முன்னாள் மாணவர்கள் மற்றும் பேராசிரியர்கள் வரவேற்று மகிழ்ந்தனர்.

சென்னை தமிழகத்தில் 164 அரசு கலைஅறிவியல் கல்லூரிகளும், ஆயிரத்துக்கும் மேற்பட்ட அரசு உதவிபெறும் கல்லூரிகளும்,, தனியார் சுயநிதி கல்லூரிகளும் இருக்கின்றன. வழக்கம்போல பிளஸ்2 முடித்த மாணவர்கள் பி.ஏ., பி.காம்., பி.எஸ்சி., பி.பி.ஏ., பி.சி.ஏ. உள்ளிட்ட இளங்கலை வகுப்புகளில் சேர ஆர்வம் காட்டினர். குறிப்பாக பி.காம். பாடப்பிரிவில் மாணவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் சேர்ந்தனர்.

இந்தநிலையில் கலைஅறிவியல் கல்லூரிகளில் இளங்கலை முதலாம் ஆண்டு மாணவ-மாணவர்களுக்கு திட்டமிட்டபடி நேற்று வகுப்புகள் தொடங்கப்பட்டன. மாணவ-மாணவிகள் உற்சாகமாக வகுப்புகளுக்கு சென்றனர். பள்ளி படிப்பை முடித்துவிட்டு முதன் முதலாக கல்லூரி வளாகத்துக்குள் கால் பதிக்கின்ற அளவில் அவர்கள் தங்கள் உயர் கல்வி பயணத்தை தொடங்கினர்.

புதிதாக வந்த மாணவ - மாணவிகளை கல்லூரியின் மூத்த மாணவர்கள், பேராசிரியர்கள், உதவி பேராசிரியர்கள் ஆகியோர் பூக்கள் கொடுத்தும், இனிப்புகள் கொடுத்தும் வரவேற்றனர்.



சென்னை, தமிழ்நாடு மின்சார வாரியத் தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம் (03.07.2023) நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தலைமையில், தமிழ்நாட்டில் கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள நாட்களில் கனமழை பெய்யும் கோயம்புத்தூர், நீலகிரி, திருப்பூர், தேனி. மற்றும் திண்டுக்கல் உள்ளிட்ட மாவட்டங்களிலும் மற்றும் தமிழ்நாட்டின் இதர பிற மாவட்டங்களிலும் மின்துறை சார்பாக எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அனைத்து தலைமைப் பொறியாளர்கள் மற்றும் மேற்பார்வைப் பொறியாளர்களிடையே விரிவான ஆய்வினை காணொலி காட்சி வாயிலாக மேற்கொண்டார். தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக தலைவர் ராஜேஷ் லக்கானி, மேலாண்மை இயக்குநர் (மின் தொடரமைப்பு கழகம்) இரா.மணிவண்ணன் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.